# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **07 ஜூலை 2019** | **பொதுக்காலம் 14ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

இறைஇயேசுவின் இனிய நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள்! கடந்த இரண்டு வாரங்களாக இயேசு தரும் சீடத்துவத்தின் தத்துவத்தைச் சிந்தித்தோம். தன்னை மறுப்பதும், தன் சிலுவையைச் சுமந்து கொண்டு இயேசுவை நாள்தோறும் பின்பற்றுதலுமே சீடத்துவம் என்று கற்பித்த இயேசு இன்று நமக்கு அவ்வாறு சீடத்துவ வாழ்க்கை வாழ்பவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி ஒன்றைக் கூறுகின்றார். **”உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்“** என்பதே அந்த மகிழ்வான செய்தி.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், '**என்னைப் பொறுத்தவரையில் உலகமும், உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்**' என்கிறார் தூய பவுல். உலகையும், பவுலையும் இணைப்பது சிலுவையும், அந்தச் சிலுவையில் தொங்கும் இயேசுவும். சிலுவையில் அறையப்பட்டிருப்பது வேதனையை, வலியைத் தந்தாலும், அந்த வலிதான் பவுலை இயேசுவோடும், உலகத்தோடும் இணைக்கிறது. தான் பெற்றுக் கொண்ட நற்செய்தியை வலிகளைப்பொருட்படுத்தாது பிறருக்கும் அறிவிக்கின்றார். அதன் பொருட்டு விண்ணகத்தில் தனக்கென இருக்கும் வெற்றிவாகைக்காக எதிர்பார்த்து அதைப் பெற்றுக் கொண்டார்.

இன்றைய சூழலில் உலகப் பற்றுக்களை தள்ளிவிட்டு கிறிஸ்துவோடு இணைந்து எளிமையாக வாழமுடியுமா? என்ற கேள்வி நம்மில் எழுகிறது. காரணம் இறைவனைப் பற்றியும் பிறரைப் பற்றியும் மறந்துச் சுயசிந்தனையில் ஊறிப்போனதே ஆகும். எனவே தான் நற்செய்தி அறிவுப்புப் பணியை ஏற்போர் தூய பவுலைப் போல இறை நம்பிக்கை மிகுந்தவராகவும், விவேகமுடையவராகவும் செயல்பட வேண்டும் என்று இயேசு நினைவுட்டுகின்றார். பிறருடன் நலமாக உறவுடன் வாழும்போது இயேசுவின் சமாதானத்தில் வாழ்கின்றோம். இத்தகைய அமைதியைத் தான் இயேசு நமக்கு விட்டுச் செல்வதாகக் கூறினார். இதையே நாம் பிறருக்குத் தரவேண்டும் என்று நம்மையும் பணிக்கின்றார். நாள்தோறும் திருப்பலியில் குருவும் ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு இருப்பதாக என்று வாழ்த்துகின்றார். கிறிஸ்துவின் சமாதானத்தூதுவராக வாழ ஒவ்வொரு திருப்பலியிலும் சிறப்பு அழைப்புத் தருகின்றார் இறைமகன் இயேசு. இதனை ஏற்று இறையரசை அறிவிக்க இணைந்து செயல்படுவோம். வாரீர்.




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 21-07-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும்.

வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக "Church of Our Lady of Lourdes" என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் "Building Fund" என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

பள்ளி விடுமுறை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், இன்று முதல் (07-07-2019) மீண்டும் ஆரம்பமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளை தவறாமல் அனுப்பி வைத்து அவர்கள் இறை அறிவிலும் ஞானத்திலும் வளர உதவுங்கள்.




## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**13-07-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.






## நற்கருணை ஆராதனை வழிபாடு

**இன்று மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## இரண்டாவது காணிக்கை

இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாவது காணிக்கை, தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் செய்யும் நற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 66:10-14c |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 66: 1-3, 4-5, 6-7, 16, 20. |
| **பதிலுரை:** | அனைத்துலகோரே! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்! |
| **இரண்டாம் வாசகம்:** | கலாத்தியர் 6:14-18 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக! கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக! அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 10:1-12,17-20 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

